**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

18.03.2025

C.O.S. 2/2024

P.W.2 திரு. பெல்ஜின் பிரபு

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்) -**

இந்த வழக்கின் வாதி ராஜபிரவீன் என்னுடைய உறவினரா என்றால் இல்லை. நான் அவரிடம் சூப்பர்வைசராக பணிபுரிகிறேன். நான் சாட்சி சொல்வதற்கு இந்த நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி சொல்லி தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதி தாக்கல் செய்த ஆவணங்களை பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதியின் அப்பா எப்போதிலிருந்து முதல்நிலை காண்டிராக்டராக பணிபுரிகிறார் என்றால் நான் அவர்களிடம் பணியில் சேர்ந்து 10 வருடங்கள் ஆகிறது. அதற்கு முன்னரே வாதியின் அப்பா முதல்நிலை காண்டிராக்டராக இருந்து வந்தார். அது எப்போது என்று எனக்கு தெரியாது. திங்கள் நகர் பேருந்து நிலையம், மீன்சந்தை ஆகியவை எந்த வருடத்திற்கான எந்த நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டு, கட்டப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் பேருந்து நிலையம் 2019 – 2020 லும், மீன்சந்தை 2020-2021 லும் நிதி ஒதுக்கப்பட்டது, எந்த நிதி என்று எனக்கு தெரியாது. ஒப்பந்தபடி

வேலை செய்ய வேண்டும் என்றால் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி அவர்கள் மேற்பார்வையில்தான் வேலை செய்ய வேண்டும் என்றால் சரிதான். வாதியின் அப்பாவிற்கு எந்த தேதியில் 1 ஆம் பிரதிவாதி வேலை செய்வதற்கான உத்தரவை கொடுத்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை, 2019 ஆம் வருடம் 10 ஆம் மாதத்தில் கொடுத்தார். 30.01.2019 ல் கொடுத்ததாக சொன்னால் தவறா என்றால் அது குறித்து எனக்கு சரியாக தொியவில்லை. பேருந்து நிலைய கட்டடம் கட்டுவதற்கு வாதியின் அப்பாவும், 1 ஆம் பிரதிவாதியும் எந்த தேதியில் ஒப்பந்தம் போட்டார்கள் என்று எனக்கு தொியுமா என்றால் தொியாது. 01.02.2019 ல் ஒப்பந்தம் போடப்பட்டு, அதற்கு பின்னர்தான் வாதியின் அப்பா அந்த வேலையை தொடங்கினார் என்றால் அது குறித்து எனக்கு தொியாது. ஆனால் 09.11.2018 ல் வாதியின் அப்பா வேலை தொடங்கியதாக பொய்யாக என்னுடைய முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அன்றுதான் வேலையை தொடங்கினார். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒரு மதீப்பிடு செய்து, அதன் அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு, வேலை தொடங்கப்பட்டால் அதில் எந்தவிதமான மாற்றமும் செய்ய வாதிக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். அதிகபடியான வேலை செய்ய வேண்டும் என்றாலும் ஒரு மதீப்பீடு செய்து, அதற்கு நிதி ஒதுக்கப்பட்டு அதிகாரிகளின் உத்தரவுபெற்று அந்த வேலையை செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. அப்படி செய்தால் அந்த வேலையை முடிக்கவே முடியாது. முதலில் ஒப்புகொண்டவாறு வேலை செய்து கொண்டிருக்கும்போதே அதில் மாறுதல் வேண்டும் என்று அதிகாரிகள் சொல்லி, அதன் பேரில் அந்த அதிகபடியான வேலையை எங்களை செய்ய சொல்லி,

அதற்கான ஆகும் அதிகபடியான தொகையை வருங்காலங்களில் டெண்டர் போட்டு பெற்று தருவதாக சொன்னார்கள். அதன் அடிப்படையில் அந்த வேலைகளை வாதி செய்தார். அந்த வேலைகளை அந்த நேரத்திலேயே செய்யாமல் பிற்பாடு செய்ய முடியாது. அப்போதே செய்தால்தான் மேற்கொண்டு ஒப்பு கொண்ட வேலையை செய்ய முடியும். பேருந்து நிலைய கட்டுமானம் பொறுத்த வரையில் தரை தளத்தில் தார் சாலை அமைப்பதற்கு நாங்கள் Estimate கொடுத்து அதற்கு டெண்டர் கொடுக்கப்பட்டது. ஆனால் வேலை நடந்து கொண்டிருக்கும்போதே, அதிகாரிகள் வந்து பார்த்துவிட்டு அந்த இடத்தில் தண்ணீர் தேங்கும் என்பதால் தார் சாலைக்கு பதிலாக காங்கீரிட் போட்டு உயர்த்தி கொடுக்க சொன்னார்கள். பேருந்து நிலையத்தில் மற்ற வேலைகளை செய்ய வேண்டும் என்றால் முதலில் அந்த வேலையை முடித்தால்தான் செய்ய முடியும். அதனால் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதின் பேரில் அங்கு அதிகப்படியான வேலையை முதலில் செய்தோம். தார் சாலைக்கு பதிலாக காங்கீரீட் தளம் அமைக்கப்பட்டதாக என்னுடைய முதன்மை சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல அந்த பேருந்து நிலைய கட்டிடம் கட்டி முடித்த பிறகுதான் காங்கீரிட் தரை தளம் அமைக்கப்பட்டது என்றால் கட்டிட வேலை முடித்து விட்டது. பெயிண்டிங், எலக்ட்ரிக்கல் வேலை செய்ய முடியும். மேலும் தரை தளம் காங்கீரிட் போட்ட பிறகுதான் அங்கிருந்த மற்ற அறைகளின் தரை தள உயரத்தையும், அங்குள்ள பேருந்து பிளாட் பார்ம் உயரத்தையும், முடிவு செய்து அதன் பிறகுதான் அவை கட்டப்பட்டது. அந்த விவரங்கள் அனைத்தும், வாதியின் அப்பாவும் மற்றும்

1 ஆம் பிரதிவாதியும் செய்யப்பட்ட ஒப்பந்திலேயே முடிவு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆனால் காங்கீரிட் தரை தளம் போட்டபிறகு அதற்கேற்றாற்போல் மேற்சொன்ன விவரங்களும் மாறும். ஒப்பந்த்திற்கு பிறகு வாதியோ, அவருடைய அப்பாவோ அதற்கு அதிகப்படியான வேலையை செய்ய முடியாது என்றாலும் அதிகாரிகள் வாதி மற்றும் அவருடைய அப்பாவை அதிகபடியான வேலை செய்ய சொன்னதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியும், அவருடைய அப்பாவும் செய்த வேலைக்கு அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை 1 ஆம் பிரதிவாதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. என்னுடைய முதன்மை சாட்சியத்தில் 07.06.2019 ஆம் தேதி ரூபாய் 15,00,000/- மும், 02.08.2019 ஆம் தேதி ரூபாய் 85,00,000/- மும் 1 ஆம் பிரதிவாதி, வாதிக்கு கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ள விவரங்கள் பொய்யா என்றால் இந்த பணம் கொடுத்தது உண்மைதான். ஆனால் அதிகபடியாக வாதி செய்த வேலைக்கு கொடுக்க வேண்டிய பணத்தை இன்னும் கொடுக்கவில்லை. 1 ஆம் பிரதிவாதி எந்த வங்கியிலிருந்து எவ்வளவு தொகை எந்த காசோலை மூலம் தந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதியும், அவருடைய அப்பாவும் 07.06.2019 முதல் 05.08.2021 வரை ரூபாய் 5,50,00,000/- பேருந்து நிலையம் கட்டி முடித்ததற்கான தொகையை பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்றால் அந்த தொகை பெற்றுக்கொண்டதாக என்னிடம் சொல்லியுள்ளார்கள். அதேபோல வாதியின் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் அக்கா மூன்று பேர்கள் உள்ளார்கள். பெயர் தெரியாது. வர்க்கீஸ் இறந்த பிறகு அந்த மூன்று பேரும், பேருந்து நிலைய கட்டிட பணியை வாதி தொடர்வதற்கு

ஒரு சம்மத பத்திரம் கொடுத்ததின் அடிப்படையில்தான் அந்த பணியை வாதி தொடர்ந்தார் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி அலுவலகத்திலிருந்து வாதியை கட்டாயப்படுத்தி அந்த பணியை செய்ய சொல்லவில்லை என்றால் வேலை முடியாததால் 1 ஆம் பிரதிவாதி பொதுமக்களிடமிருந்து போராட்டங்களை சந்தித்ததார்கள். அதனால் 1 ஆம் பிரதிவாதி அலுவலகத்திடமிருந்து வேறு காண்டிரக்டர் வேலை செய்து கொண்டிருந்த வாதியை அந்த வேலையை முடித்து தருமாறு கேட்டுக் கொண்டார்கள். அதனால் அவர் ஒப்புக் கொண்டார். 1 ஆம் பிரதிவாதியிடம் வாதி அப்போது வேறு காண்டிரக்ட் வேலை செய்தாரா என்றால் இல்லை. பொதுப்பணித்துறையில் காண்டிரக்ட் வேலை செய்து கொண்டிருந்தார். வாதி எந்த தேதியிலிருந்து முதன்மை நிலை காண்டிராக்டராக பணிபுாிகிறார் என்ற விவரம் தொியுமா என்றால் தொியாது. மீன் சந்தை வேலையும் முறைப்படி டெண்டர் வைக்கப்பட்டு, அதில் வாதி கலந்து கொண்டு அந்த வேலையை எடுத்தார் என்றால் சரிதான். அந்த வேலை ரூபாய் 1 கோடிக்கானது என்றால் சரிதான். அதற்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டு, அதன் அடிப்படையில்தான் அந்த வேலையை செய்தார் என்றால் சரிதான். பேருந்து நிலையம் கட்டும்போதும், மீன்சந்தை கட்டும்போதும் பொதுமக்கள் நடத்தியதாக சொன்ன போராட்டங்கள் எந்த தேதி, மாதத்தில் நடந்தது என்று சொல்ல முடியுமா என்றால் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. அவ்வாறு எந்தவிதமான போராட்டமும் நடைபெறவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. செய்திதாள்களில் செய்தி வந்தது, பொதுமக்கள் 1 ஆம் பிரதிவாதியிடம் கடிதங்கள் கொடுத்ததாக செயலாளர் சொன்னார். அவ்வாறு

எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மீன் சந்தை வேலைக்கான ரூபாய் 1 கோடியை வாதி வாங்கி விட்டார் என்றால் சரிதான். அதிகபடியான வேலைக்கு தொகை இன்னும் தரவில்லை. அரசு பணிகளுக்கு வாய்மொழி உத்தரவின்படி எந்த வேலையும் செய்யமாட்டார்கள் என்றாலும் ஒப்பந்தப்படிதான் செய்வார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய முதன்மை சாட்சியத்தில் பொறியாளரை வைத்து அதிகபடியான வேலைகளை அளவீடு செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அது எந்த தேதி, மாதம் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அவருடைய கையொப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மதீப்பீடு படி என்ன வேலை செய்யப்பட்டிருந்ததோ அதைதான் அளவீடு செய்யப்பட்டிருந்தது என்றாலும் அங்கு அதிகபடியான எந்த வேலையும் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. ரூபாய் 11,66,604/- அதிகபடியான வேலை செய்ததற்கும் நான் எந்த ஆவணமும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, பார்த்துள்ளேன். என்னுடைய முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ள கணக்குப்பட்டியலில் உள்ள விவரங்களுக்கும், ஒப்பந்தப்படியான வேலைக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. முதன்மை சாட்சியத்தில் 7 ஆம் பக்கத்தில் பிரதிவாதிகள், வாதிக்கு ரூபாய் 65,00,000/- கொடுக்க கடமைப்பட்டவர்கள் என எதன் அடிப்படையில் கூறினேன் என்றால் வாதி மீன் சந்தை கட்டும்போது அதிகபடியான வேலை செய்ததை கணக்கில் எடுத்துக்கொண்டு சொல்லியுள்ளேன். மீன் சந்தை கட்டுமான பணிகளை கட்டி முடிக்கப்பட்டதில் ரூபாய் 45,00,000/- த்திற்கு அதிகமான பணிகள் செய்து முடிக்கப்பட்டதாக கூறிவிட்டு, அதற்கு பிரதிவாதிகள் வாதிக்கு

ரூபாய் 65,00,000/- ம் தர வேண்டும் எனவும், 7 ஆம் பக்கத்தில் உள்ள கணக்குப்பட்டியலில் கடைசியாக ரூபாய் 61,00,000/- கொடுக்க வேண்டும் என்றும் முன்னுக்கு பின் முரணாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ஏதோ கணக்கு பிழை உள்ளது. அதிகபடியாக வாதி எந்த வேலையும் செய்யவில்லைஎ ன்றாலும் அதனால்தான் அந்த கணக்கு விவரங்களை முன்னுக்கு பின் முரணாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் வேலை செய்யவில்லை என்றாலும் அவர் சொல்லி கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்என்றாலும் சரியல்ல. முதன்மை சாட்சியத்தில் சொல்லியுள்ள அனைத்தும் பொய் என்றாலும் வாதிக்கு வேண்டியவர் என்பதால் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.